# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 4 இதழ் : 8 நவம்பர் 2025



SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

# உங்கள் கனவு இல்லம் இனி ஒரு கனவு இல்லை.

## இன்றே சேமிக்க துவங்குவோம்!!!

SREE VISALAM CHIT FUND LTD SVCF ESTD 1947 79th YEAR




1 இலட்சம் சீட்டு முதல் கோடி சீட்டு வரை....

ஸ்ரீ விசாலம் சிட் ஃபண்ட் லிமிடெட்

79th YEAR

நம்பிக்கை, நாணயம், நேர்மை

நிலையான தன்மையுடன், வாடிக்கையாளர் சேவையில்...

எங்களை, ஊக்குவிக்கும் வாடிக்கையாளர்கள்

அனைவருக்கும் நன்றி

+91 8667003356 | 04565 283 477 WWW.SREEVISALAM.COM


SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

பதிவு அலுவலகம்:
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

நிர்வாக அலுவலகம்:
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

மத்திய அலுவலகம்:
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

https://www.sreevisalam.com/
போன்: 86670 03356





GET IT ON
Google Play

இப்போது உங்களின் மேம்பட்ட வாசிப்பு அனுபவத்திற்காக
நமது மின்னிதழ் மொபைல் செயலி வடிவில்

**Naam Nagarathar Mobile App**

இனி என்றும்.. எப்போதும்... உங்கள் கையில் எளிதாக...
இன்றே டவுன்லோட் செய்து வாசிப்பின்
உன்னத அனுபவத்தை பெற்றிடுங்கள்...



# நாம் நகரத்தார்


சமூக இணையதள மின்னிதழ்

நவம்பர் 2025

மலர் : 4 இதழ் : 8

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்

நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**இதழ் வடிவமைப்பு**

ச. தஸ்லிம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்

மின்நூல் வெளியீட்டாளர்கள்

172 – D மேட்டுப்பாளையம் சாலை

நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,

கோயம்புத்தூர் – 641043.


---


**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534


---


கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# PALLATHUR MOTORS LLP

SWITCH TO THE FUTURE

## PETROL RIDER LIFE

SALARY வந்தா உடனே ,
பெட்ரோல் - க்கு
ஒரு 2000 to 4000 தனியா
வைக்கணும் !




## ELECTRIC RIDER LIFE

SALARY வந்தா உடனே,
Extra 2000 to 4000
Saving - ல கோல்டு
வாங்கலாமா இல்ல,
சீட்டு போடலாமானு
யோசிக்கலாம்...!



# ELECTRIFY YOUR JOURNEY NOW

Go far and wide with just a single charge

LECTRIX

Book Your TEST DR!VE Now!!



மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு...

வணக்கம்....!

ஒவ்வொரு விசேஷத்திலும் நம் வீட்டு வளவுக்குள் நமது உறவுகளைச் சந்தித்து மகிழ்வு கொள்வதைப் போல், ஒவ்வொரு மாதமும் இம்மலர் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி..!இந்த இதழுடன் எங்கள் நான்காண்டு சமூக இதழியல் பணியை நிறைவு செய்து எங்கள் பயணத்தை நகரத்தார்கள் அனைவரது ஆதரவுடன் மேலும் தொடர்கிறோம்.

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நமது மின்னிதழுக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் முதற்கண் எங்களின் பணிவான நன்றிகள்!.

ஆன்மிகம், மொழி, பண்பாடு, கலாச்சாரம் மற்றும் நிகழ்வுகள் என பன்முகப் பகிர்வாய் இந்த மலர் மிளிர வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அந்த வகையில் நம் நகரத்தார் சமூகக் கட்டமைப்பின் மீதான நம்பிக்கையை வளர்க்கும் விதமாகவும், படிப்பவர்கள் பல்துறை செய்திகளை படித்து பயனுறும் வகையிலும் நமது இதழ் தனது பங்களிப்பை தொடர்கிறது.

வாசகர்கள் எந்நேரத்திலும் எப்போதும் மின்னிதழை வாசிக்க ஏதுவாக மின்னிதழின் MOBILE APP வெளியிடப்பட்டு தற்போது உலகளாவிய பாட்டில் உள்ளது.

மேலும் அனைவரது ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கேட்டு நமது மின்னிதழில் தேவையான மாற்றங்களை அவ்வவ் போது செய்த வண்ணம் இருக்கின்றோம்.

நகரத்தார்களிடையே வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடங்கிய எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம். 'இது நமது பத்திரிக்கை, நம் எண்ண வெளிப்பாடு' என்று நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள். மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது 96590 32994 என்ற வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும்.

இதழ் குறித்த தங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் தங்களது படைப்புகளை naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.


நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

**அட்டை படத்தில்...**




முருகனின் முதல் கற்றளிக் கோயில் கண்ணனூர் அருள்மிகு ஸ்ரீ பாலசுப்ரமண்யர் சந்தனக் காப்பு அலங்காரத்தில் – 27.10.2025 கந்த சஷ்டி தினத்தன்று

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## வளத்திஸ்ரீ சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI 2005

பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை

**எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு**

**ரூ. 1,00,000/- முதல்**

**ரூ. 30,00,000/- வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 30% முதல் 40%வரை

பல்லாண்டு கால நம்பிக்கை ! நாணயம் ! நேர்மையான அணுகுமுறை!

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

0431-2760064
0431-7968005

துவக்கம் 2005

94439 86143

# TRICHY SHREE VALATHI CHITFUNDS (P) LTD.

## VALATHI SHRI CHIT FUNDS (P) LTD.,

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

"ஸ்ரீ வளத்தி"
C - 145 - D, முதல் தளம், N.V.V. கேஸ்டில்
தில்லைநகர் 6–வது கிராஸ் – கிழக்கு
திருச்சிராப்பள்ளி - 620 018.
Cell : 94439 86143

"ஸ்ரீ வளத்தி"
9/1, (4/1),அருணோதயா அபார்ட்மெண்ட்
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093
Cell : 91235 71029

எண். 1, முதல் தளம், பழைய சொக்கநாதர் கோவில் தெரு,
குமார் மெடிக்கல்ஸ் மாடியில்
மதுரை - 625 001. Cell : 89034 90064.

tvcfpl@gmail.com www.valathichits.com

★ வாய்மையே வெல்லும் ★

## இந்த இதழில்....


**நமது சிந்தனைக்கு**

- ஆணவத்தோடு அலையாதீர்கள்! அல்லல்பட்டு மடியாதீர்கள்!
  –கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா. .................................. 12

**ஆன்மீகம்**

- எச்சிக்கலும் போக்கும் ஆறுமுக சுவாமிகள் – பா.சு. ரமணன் ............... 21

**மொழி**

- வாங்க பேசலாம் ..! – – பேரா. கு. அன்புமெய்யப்பன் ...................... 29

**சமையல்**

- முருங்கைக்காய் சூப்.............................................. 33

**கவிச்சோலை**

- தனிமையின் வலிகள் –தஞ்சை பழ வள்ளியப்பன் மதுரை................. 37
- பூங்காவிற்கு வக்காலத்து – கவிஞர் எம்.சோலை காரைக்குடி ............. 47
- கீர்த்தி அளிக்கும் கார்த்திகேயன் – அரு. சிவகாமி இராமனாதன் ஒக்கூர் ..... 66

**வாழ்வியல்**

- பெண் கதவு... ஆண் பூட்டு..! – சேவு.முத்துக்குமார் காரைக்குடி ............ 38

**படித்ததில் பிடித்தது**

- எதையும் பாசிட்டிவாகப் பார்ப்பது எப்படி? ............................ 40

**சிறுவர் பக்கம்**

- மழலை மழைத்துளிகள்..!!! கல்லல் மீ.மணிகண்டன் Texas, USA ........... 46

**நிதி மேலாண்மை**

- பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...
  – கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) – க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ............. 49

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி...மீன லக்னம்..! – ஜோதிடர் எல்லி ........................ 60

உடல் பிணிக்கு மட்டுமல்ல, வினைப் பிணிகளுக்கும்
உற்ற மருந்து வேல்மாறல் மகா மந்திரம்.

# வினைகள் தீர்க்கும்
# வேல்மாறல்
## மகா மந்திரம்

( வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள்
தொகுத்தருளியது )




**தினமும் பாராயணம்
செய்யும் வகையில் எளிய நடையில் புத்தகமாக**

- வேல் வழிபாடு
- வேல் மாறல் பொருள் விளக்கம்
- வேல் மாறல் பாராயணம் செய்யம் முறை
- முருகனின் முதற்கற்றளிக் கோயில்
  என பல்வேறு தகவல்களுடன்

விலை
ரூபாய்
**46/-**
தபால் செலவு தனி

வெளியீடு : அனுஷம் புக்ஸ் - கோவை

புத்தகத்தினை ஆர்டர் செய்ய :

**96590 32994**

எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

**தினமும் வேல் மாறல் பாராயணம் செய்து கலியுக கடவுள் கந்தன் அருள் பெறுவோம்**

# ஓர் வேண்டுகோள்

## விளம்பரம் அல்லது நன்கொடை
## கொடுத்து உதவுங்கள்

**வாசகர்கள் அன்பான கவனத்திற்கு**

கடந்த மூன்று ஆண்டுகளாக நமது மின்னிதழ் உலகளாவிய நகரத்தார் பெருமக்களுக்கு இலவச இதழாக சமூக வலைத்தளங்கள் மூலமாகவும் – மொபைல் செயலி (Mobile App) மூலமாகவும் மாதம் தோறும் வழங்கப்பட்டு வருகிறது. மின்னிதழை அனைவரும் தங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கு பகிர்கிறார்கள்.

நகரத்தாரின் பண்பாட்டினை இன்றைய தலைமுறையினர் அறியும் வண்ணமும், நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்திலும் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

**இதழின் வளர்ச்சியில் தாங்களும் பங்கேற்கும் வகையில்
விளம்பரங்களும், நன்கொடைகளையும் அளித்து உதவுங்கள்.**

**அலைபேசி எண்ணில் G Pay செய்ய:**

**97917 76534**

**UPI Pin: senaadigital@okicici**

இதழில் விளம்பரம் செய்ய
கீழ்கண்ட எண்ணில் அழைக்கவும்.

**96590 32994**

# ஆணவத்தோடு அலையாதீர்கள்! அல்லல்பட்டு மடியாதீர்கள்!





– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது கவிஞர் புலமைப் பித்தனின் பாடல்.

பிறந்த பிள்ளைகள் வளர்ந்து வரும் நேரத்தில் பெற்றோர்கள் நல்ல கருத்துக்களை அவர்களிடம் சொல்லி அவர்களை நல்ல மனிதர்களாக மாற்ற வேண்டியது முக்கிய கடமையாகும். அந்தப் பிள்ளைகள் சமூகத்தில் மற்றவர்களோடு வளரும் பொழுது, இயல்பாகவே ஆணவம், கன்மம், மாயை, மாமேயம், திரோதனம் ஆகிய ஐந்தும் பிள்ளைகளோடு ஒட்டிக் கொள்கின்றன.

இதனால் அதனுடைய உண்மைத்தன்மை வெளிப்படுகிறது. அதே குழந்தை வளர வளர தேவையற்ற அழுக்கு என்னும் ஐந்து மலங்களை கொஞ்சம் கொஞ்சமாக தங்கள் மீது அப்பிக்கொள்கின்றன.

ஆணவம் என்பதுதான் முதலில் மனிதனைப் பிடித்து ஆட்டுகிறது. அதனால் தான் மனிதன் எந்திரமயமாகவும், தந்திரமயமாகவும் மாறி இந்த உலகை வலம் வருகின்றான்.



ஆணவத்தின் விளைவு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பதை குன்றக்குடி அடிகளார் பின் வருமாறு குறிப்பிடுகின்றார். "ஆணவம் என்பது இருளைக்காட்டிலும் கொடியது!" என்கிறார். "இருளோ தன்னைக் காட்டும், அது காணக் கூடிய பொருளை மட்டும் மறைக்கும். ஆணவமோ தன்னையும் காட்டாது! தன் செயலையும் காட்டாது!" என்கிறார்.

இந்தக்கூற்றை சற்று நாம் சிந்தித்துப்பார்த்தால், அந்தக்கூற்று முற்றிலும் உண்மைதான் என்பது நமக்குப்புரியும்.

இன்றைக்கு நம்மிடையே வாழ்கின்ற பலர் ஆணவத்துடன் தாங்கள் திகழ்வதை அறியாமலேயே வாழ்கின்றனர். இன்னும் சிலரோ பணிவாக நடந்து கொள்வது போல நம்முன்னே நடிக்கின்றனர். நடிப்பின் மூலம் தங்களின் ஆணவத்தை திரைபோட்டு மறைத்து விட முயல்கிறார்கள்.

எல்லாவற்றிலும் தாங்களே வல்லவர்கள் என்ற நினைப்பே ஆணவத்தின் உச்சமாகத் திகழ்வதால்,தாங்கள் அலங்கரிக்கும் தலைமைப் பொறுப்பு களில் இருந்து தலைக்குப்புற விழுகிறார்கள்.

ஐந்து மலங்களால் அவதிப்படும் மனிதர்களைப்பற்றி மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் குறிப்பிடும் பொழுது, ஆத்மா என்கின்ற தயிரானது, ஐம்புலன் களான மத்திடம் அகப்பட்ட தயிர் போல உழல்வதாகப்பாடுகிறார்.



**குலங் களைந் தாய்; களைந் தாய் என்னைக்**
**குற்றம், கொற் றச் சிலையாம்**
**விலங்கல் எந் தாய் விட் டிடுதிகண்**
**டாய்! பொன்னின் மின்னு கொன்றை**

**அலங்கல் அந் தாமரை மேனியப்**
**பா! ஒப்பி லாதவனே!**
**மலங்கள் இந் தாற் சுழல் வன்தயி**
**ரில்பொரு மத்துறவே!** – (நீத்தல் விண்ணப்பம்–29)

இதனை எத்தனைபேர் அறிவார்கள். ஆணவம் தலைக்கு ஏறிவிட்டால், அங்கு அறிவோ அல்லது அன்போ வேலை செய்வதில்லை. பல்லாண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பெரியவர்கள் திரைகடல் ஓடித் திரவியம் தேடிய பெருமக்கள். தாங்கள் ஈட்டிய பொருள் காரணமாக சிறிதும் ஆணவம் கொண்டதில்லை.



பணவசதி பெருக பெருக பணிவும், பண்பும் அவர்களிடம் பெருகியதே தவிர ஆணவம் ஒரு சிறிதும் அவர்களிடம் இல்லாமல் இருந்தது. அதன் விளைவால் தங்களைச் சார்ந்த சமூகத்தார்கள் நலம்பெற வேண்டும் என்ற நோக்கில் பலபுண்ணியத் தலங்களிலும் துறைமுக நகரங்களிலும் பொது அமைப்பை உருவாக்கி, அதன் முலம் மடங்களை, விடுதிகளை, நந்தவனங் களை, கோவில்களைக் கட்டினார்கள். வசதியற்றவர்களும் வாழ்க்கையில் அனைத்தையும் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவற்றை உருவாக்கினார்கள்.

ஆனால் இன்றைக்கு தங்களிடமுள்ள உள்ள பணத்தாலும், பதவியாலும், ஆணவத்தின் உச்சியில் திகழ்வோர் பொதுச் சொத்துக்களை காப்பாற்றுகிறேன் என்று சொல்லிக்கொண்டு, வேடம் தரித்துக் கிளம்பியவர்கள், அவற்றைத்தங்களின் தனிச் சொத்தாகவே மாற்றிக் கொள்கிறார்கள்.

இன்னும் சிலரோ பொது அமைப்பின் சொத்துக்களை தாங்களே நிர்வாகம் செய்ய தகுதியானவர்கள் என்று பறைசாற்றிக்கொண்டு, அதிலிருந்து வரும் வருமானங்களை அபகரித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.



இதுகுறித்து எவரும் கேள்விகள் கேட்டால், அவனை "ஒற்றுமையைக் குழைப்பவன்" என்று முத்திரை குத்தி தூக்கி எறிவதற்கான முயற்சிகளைத்தான் செய்வார்கள் ஆணவம் பிடித்த மனிதர்கள்.

எத்தனைநாள் வாழ்வோம்? என்று தெரியாத போதே இவ்வளவு ஆட்டம் போடுவோர், இத்தனை நாள் தான் வாழ்வோம் என்று தெரிந்து விட்டால், என்ன என்ன செய்வார்கள்? சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

ஆணவத்தைப்பற்றி சிந்திக்கின்ற போது எனக்கு ஒரு கதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

ஒரு ஊரின் எல்லைப் பகுதியில் கரையான்கள் பல நாட்களாக பாடுபட்டு புற்று ஒன்றைக்கட்டின. அதைக் கவனித்த விஷப்பாம்பு ஒன்று கரையான்களிடம் கேட்டது. "நீங்கள் கட்டிய புற்று அருமையாக இருக்கிறது. நான் ஒருமுறை உள்ளே சென்று பார்க்கட்டுமா?'' என்றது. அதற்கு கரையான்கள் சம்மதித்தன. பாம்பு புற்றுக்குள்ளே சென்று பார்த்தது. நீண்ட நேரமாகியும் பாம்பு வெளியே வரவில்லை. கரையான்கள் எல்லாம் சேர்ந்து, வெளியிலிருந்து பாம்பைச்சத்தம் போட்டுக் கூப்பிட்டன. அதைக் கேட்ட பாம்பு சொன்னது,''புற்று எனக்கு மிகவும் வசதியாக இருக்கிறது, இனி இது தான் என்னுடைய வீடு! வேண்டுமென்றால், நீங்கள் இன்னொரு புற்றை கட்டிக் கொள்ளுங்கள். இங்கிருந்து முதலில் கிளம்புங்கள், இல்லையென்றால் என் விஷத்துக்கு நீங்கள் இரையாவீர்கள்!" என்று மிரட்டியது பாம்பு.

சோகத்தோடு கிளம்பிய கரையான்கள் வழியில் சாது ஒருவரைச் சந்தித்து முறையிட்டன. கரையான்களின் சார்பாக சாது பாம்பிடம் பேசினார். உனக்குப்புற்றை உருவாக்கிக்கொள்ளும் ஆற்றல் இல்லை. நீயோ ஆணவத்தோடும், பலத்தோடும் அடுத்தவன் உழைப்பைத் திருடுகிறாயே, இது கொஞ்சமும் நியாயமல்ல! என்றார்.



பாம்பு அதற்குப்பதில் சொன்னது "சாதுவே! உலகத்தில் பலசாலிகள் வைத்ததுதான் சட்டம் என்பது உங்களுக்குத் தெரியாதா? பலசாலியிடம் நியாயத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தது. ஆணவக்காரனையும், பலமிக்கவனையும் நம்மாலே திருத்த முடியாது.காலம் அவர்களுக்குப் பாடம் புகட்டும் என்று கரையான்களிடம் சொல்லி விட்டு சாது புறப்பட்டார்.

ஒருநாள் பாம்பு தன் குட்டிகளோடு புற்றைவிட்டு வெளியே வந்து விளையாடிக் கொண்டு இருந்தது. அந்த நேரத்தில் பருந்து ஒன்று வேகமாக வந்து ஆணவம் பிடித்த பாம்பை கவ்விக் கொண்டு பறந்துவிட்டது. மிக உயரத்தில் பறந்த பருந்து அங்கிருந்து பாம்பை பொத்தென்று கீழே போட்டது.

பாம்பு விழுந்த இடம் சாதுவின் ஆசிரம வாசல். உயிர் பிரியும் தருவாயில் சாதுவிடம் பேசியது பாம்பு. "சாதுவே! நான் இல்லாமல் குட்டிகளால் வாழ முடியாது. ஆகவே என்னைக் காப்பாற்றுங்கள்!" என்று கெஞ்சியது.

அதற்கு சாது "பாம்பே, விதி சொல்லிக் கொடுக்கும் பாடம் ஒன்றைத் தெரிந்து கொள். ஆணவம்,வலிமை, பலம் என்பது நிரந்தரமல்ல. இன்று எவற்றையெல்லாம் பலமாக உணர்கிறாயோ, அவற்றை யெல்லாம் நாளை பலவீனமாக உணர்வாய். அதே போல, இன்று பலவீனமாக பார்க்கப்படுபவை நாளை பலமாக மாறும் காலமும் வெகு தொலைவில் இல்லை. ஆகையால், பலவானாக இருக்கும் போது பக்குவமாகவும், பிறருக்கு கெடுதல் செய்யாமலும் வாழ்ந்திருக்க வேண்டும். ஆனால் நீ அப்படி வாழவில்லை. கரையான் என்ற வலிமையில்லாத எதிரியை நீ தேர்ந்தெடுத்தாலும், 'பருந்து' என்ற பலமான எதிரிக்குப்பதில் சொல்லும் நிலைக்கு காலம் உன்னை தள்ளியிருக்கிறது. பாம்பே! நிதர்சனமான ஒரு உண்மையைத்தெரிந்து கொள். ஆணவத்தால் அடுத்தவனை வருத்தி, அதை ரசிக்கும் உன் குணத்தை இந்த உலகம் வேண்டுமானால் மறந்து போகலாம். ஆனால், நீ கீழே விழும்போது காலம் அதை உன் நினைவில் கொண்டு வரும். அப்போது அதை தாங்கும் சக்தி உனக்கோ, உன் சந்ததிகளுக்கோ இருக்காது. உன் சந்ததிகள் உன் பாவத்தை பங்காக பிரித்துக் கொள்வார் கள்" என்று சொல்லிவிட்டு சாது சென்றார்.

இந்தக்கதையின் வழியாக நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது, ஒவ்வொரு மனிதனும் ஆணவத்தோடு திகழ்வதைத்தவிர்க்க வேண்டும்.ஆணவத்தை தவிர்த்தால்,நம் அழிவையும் தவிர்க்கலாம்.



ஆணவமும், பலமும் ஒரு சேரப்பெற்ற மனிதர்களின் அராஜகம், அகந்தை, கோபம் ஆகியவற்றை காலம் ஒருநாள் கட்டாயம் எடுத்துச்செல்லும். மனிதர்கள் அப்போது உணர்ந்து பயன் இல்லை! அதற்கு காலம் ஒருநாளும் இடம் தராது.

இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன். நண்பர்களே! அதுவரை இந்தத்தலைப்புக் குறித்துச் சிந்தியுங்கள் தோழர்களே! என்ன சரிதானே!

கருத்துப் பகிர்வுக்கும், தொடர்பிற்கும்
9791033913,
aamchennai@gmail.com

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD. NKF

**Our culture is financial Discipline**

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani

1983 - 2025
43rd ANNIVERSARY

1 Lakhs to Crore

**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

# எச்சிக்கலும் போக்கும் ஆறுமுக சுவாமிகள்



– பா.சு. ரமணன்

மனிதர்கள் தத்தம் கர்மவினையால் வாழ்க்கையில் பல்வேறு இன்ப துன்பங்களை அனுபவிக்கின்றனர். துயருற்றோர் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்த, அவர்கள் தன்னையும், இறையையும் உணர்ந்து நல்வாழ்வு வாழ வழிகாட்ட மகான்கள், யோகிகள், ஞானிகள், சித்தர்களின் அவதாரங்கள் நிகழ்கின்றன. அப்படிப்பட்ட மகா சித்தர்களுள் ஒருவர்தான் எச்சிக்கலும் போக்கும் ஆறுமுக சுவாமிகள். பெயருக்கேற்றவாறு இவர் மானுடர்களின் எச்சிக்கலையும் போக்கக் கூடியவர்.

## தோற்றம்

இவர் கொங்கு நாட்டின் ஒரு பகுதியான ஈரோட்டின் அருகே உள்ள 'துடுப்பதி' என்னும் ஊரில் பிறந்தவர். இயற்பெயர் முத்துகிருஷ்ணன். இளவயதிலேயே பெற்றோரை இழந்த இவர், வீட்டை விட்டு வெளியேறி நாடோடியாய் வாழ்ந்தார். இந்தியா முழுமையும் சுற்றினார். வயிற்றுப் பிழைப்பிற்காக சமையல் உதவியாள் தொடங்கி, ஏவலாளர் வரை பல்வேறு பணிகளைச் செய்த போதிலும், எதிலும் மனம் தோயவில்லை.

## ஆன்மிகப் பயணம்


ஆகவே, காசி, பத்ரிநாத், கேதார்நாத் போன்ற பகுதிகளுக்குப் பயணித்தார்.

அவர்களோடு தங்கி உதவியாளராகப் பணியாற்றினார். இமயமலை வாழ் சாது ஒருவரால் இவருக்கு பல்வேறு சித்துக்கள் கைவந்தன. ஆயினும் மனம் அமைதியுறவில்லை. வாழ்க்கையின் பரம சத்தியத்தைத் தேடி யாத்திரையைத் தொடர்ந்தார்.

## குரு தீட்சை

முத்துகிருஷ்ணன், பம்பாய்க்குச் சென்றார். உணவு உடைக்காக உழைத்துச் சாப்பிட்டு வந்தார். ஓய்வு நேரத்தில் ஆலயங்களுக்குச் செல்வதும், தனித்திருந்து தியானிப்பதும் வழக்கமாயின. இந்நிலையில் பம்பாய் கணேஷ்புரியில் வசித்துவந்த ஸ்ரீ நித்யானந்த சுவாமிகள், முத்துக்கிருஷ்ணனின் உண்மைத் தேடலையும், ஆன்ம பரிபக்குவத்தையும் உணர்ந்து கொண்டார். குரு உபதேசம் செய்து, தனது சீடர் ஆக்கிக்கொண்டார். முத்துக்கிருஷ்ணன், 'ஆறுமுக சுவாமிகள்' ஆனார். வாழ்வின் உயர் உண்மைகள் அவருக்கு குருவால் உணர்த்தப்பட்டன.

பல ஆண்டுக் காலம் குருவுடன் தங்கியிருந்து ஆன்ம சாதனைகளைத் தொடர்ந்த ஆறுமுக சுவாமிகள், ஒரு கட்டத்தில் குருவிடமிருந்து விடைபெற்றார். நாடெங்கிலும் அலைந்து திரிந்தார். இறுதியில் தமிழ்நாட்டை அடைந்தார். திருவண்ணாமலை உட்படப் பல இடங்களுக்குச் சென்றார். பல மலைக்குகைகளில் தவம் செய்தார்.



## சித்தரும் மஹாபெரியவரும்

இப்படிப் பல இடங்களுக்கும் சென்ற சுவாமிகள், ஒருசமயம் மயிலாடுதுறைக்கு வந்தார். அப்போது அங்கு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர் திக்விஜயம் மேற்கொண்டிருந்தார். அவரை அன்பர்கள் பூர்ண கும்ப மரியாதையோடு ஆலயத்திற்கு அழைத்து வந்தனர். ஸ்ரீ ஆறுமுக சுவாமிகளும் அவர்களின் கூட்டத்தில் இணைந்தார். இடுப்பில் சிறிய துண்டுடனும் வெற்று மார்புடனும் அவர் அந்தக் கூட்டத்தில் நடந்து சென்று கொண்டிருந்தார். அதைப் பார்த்த அங்குள்ளவர்களின் சிலர், அவரைப் பைத்தியம் என்றும், பரதேசி என்றும் நினைத்தனர். அக்கூட்டத்தில் இருந்து வெளியேறுமாறு விரட்டினர். உடனே சுவாமிகளும் பெரியவரைப் பின்தொடராமல் அங்கேயே ஒதுங்கி நின்றுவிட்டார்.

காஞ்சிப் பெரியவர் உடனே அங்கேயே நின்று, அந்த அன்பர்களை நோக்கி, "அவரை ஏன் தொந்தரவு செய்கிறீர்கள், அவர் யாரென்பதும், எதற்காக நம்கூட வந்து கொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியுமா? " எனக் கண்டித்துவிட்டு, சித்தரிடம் நடந்த சம்பவத்திற்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார். ஆறுமுக சித்தரோ எதுவுமே நடக்காததுபோல் சிரித்தபடி அவ்விடம் விட்டு நகர்ந்துவிட்டார்.

## விராலிமலைச் சித்தர்

பல இடங்களிலும் அலைந்து திரிந்த சுவாமிகள் விராலிமலைக்குச் சென்றார். அந்த மலைப்பகுதியில் இருந்த குகையை வாழ்விடமாகக் கொண்டார். ஏற்கனவே தனது தவம் மூலம் மூத்த தேவி மற்றும் வராஹியின் அருள் பெற்றிருந்த சுவாமிகள், முருக உபாசனை செய்து அருள் பெற்றார். தனது குகையில் வேல் ஒன்றை நட்டு வழிபட்டு வந்தார்.


நெடுநெடுவென உயரம். முழங்கால்வரை நீண்ட கைகள். மெல்லிய தேகம். முகத்தில் புரளும் தாடி. ஒளிவீசும் கண்கள். அரைகுறையான கிழிந்த பச்சைநிற ஆடை என விராலிமலைப் பக்கத்தில் வலம்வந்த சித்தரை, ஆரம்பத்தில் அப்பகுதி மக்கள் பலரும் பித்தர் என்றே கருதினர். ஆனால், தான் பார்க்கும் நபர்களில், தகுதியுள்ள ஒரு சிலரிடம் மட்டும், அவர்கள் வாழ்வில் நடந்த, வரப்போகிற நிகழ்வுகள் சிலவற்றைக் கூறி எச்சரித்தார் சுவாமிகள். அவர்களுக்கு அறிவுரை கூறினார். சுவாமிகள் கூறிய விஷயங்கள் அப்படியே பலிக்க ஆரம்பித்ததால், சுவாமிகள் ஓர் அவதார புருடர் என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டனர். குகையை நாடிவந்து வணங்கினர்.


சுவாமிகளைக் கண்டு வணங்கிச் செல்பவர்களின் வாழ்வினிலே மகத்தான மாற்றங்களும் ஏற்றங்களும் தொடர்ந்து ஏற்படவே, அவரைக் காணக் கூட்டம் பெருகிற்று. பல்வேறு மூலிகைகளையும் அதன் ரகசியங்களையும் பற்றி நன்கு அறிந்திருந்த ஆறுமுக சுவாமிகள், அதனைக் கொண்டு பலரது நோய்களை நீக்கினார். அதனால் மக்கள் அவரை அன்புடனும் பக்தியுடன் 'விராலிமலைச் சித்தர்' என்று போற்றி வழிபட்டனர்.

## ஆலயத் திருப்பணிகள்

சுவாமிகள் தன்னை நாடி வந்த பக்தர்களைக் கொண்டு விராலிமலை ஆலயத் திருப்பணிகளை மேற்கொண்டார். பல்வேறு அறப்பணிகளைச் செய்ய அவர்களைத் தூண்டினார்.

## எச்சிக்கலும் போக்கி





கோட்டையூரில் சமாதி கொண்டருளும்
விராலிமலை

எச்சில் பொறுக்கி
ஆறுமுக சுவாமிகள் பதிகம்

பாடியவர்
புலவர் சோம. இளவரசு

பதினாறாம் ஆண்டு குருபூசை வெளியீடு
21-5-97

வழங்குவோர்:
டாக்டர் ச. மெய்யப்பன்
வெற்றி குருப் நிறுவனங்கள்
சென்னை, சிதம்பரம், மதுரை, திருச்சி, கோவை

சுவாமிகள் எங்கு, எப்போழுது வெளியே சென்றாலும், சில நாய்கள் அவரைச் சுற்றிக் கொண்டே இருக்கும். மனிதர்களின் கர்ம வினையை மாற்றும் மகத்தான ஆற்றல் கொண்டிருந்த சுவாமிகள், தம்மை நாடி வருவோரைப் பற்றிய விவரங்களை தமது ஞான திருஷ்டியால் முன்னரே அறிந்து கொண்டு, அவர்களுக்கு அருள் புரிவார். அதே சமயம் கயவர்களையும், தீயவர்களையும் தம் அருகே வரவிடாமல் திட்டி விரட்டி விடுவார். அடியவர்களின் வாழ்வில் பல்வேறு அற்புதங்களை ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள் நிகழ்த்தியுள்ளார்.

மனிதர்களின் எச்சிக்கலையும் போக்கும் மகத்தான சக்தி கொண்ட இம்மகானை மக்கள் அன்போடு 'எச்சிக்கலும் போக்கும் ஆறுமுக சுவாமிகள்' என்று அன்போடு அழைத்தனர். ஆனால், நாளடைவில் இது மருவி, 'எச்சில் பொறுக்கி ஆறுமுகச் சுவாமிகள்' என்று வழங்கப்படுவதாயிற்று.

## கோட்டையூர்

தம்மை நாடி வந்த பலருக்கும் பல்வேறு நன்மைகளைச் செய்த ஆறுமுக சுவாமிகள் தனவணிகர் குடும்பத்தைச் சேர்ந்த சிலரை ஆட்கொண்டார். அவர்கள் சுவாமிகளின் ஆலோசனைப்படி தங்கள் வாழ்க்கையை நடத்தி உயர்ந்தனர். இந்நிலையில், தன் வாழ்வின் இறுதிநாள் நெருங்குவதை அறிந்தார் சுவாமிகள். தனது சமாதி வைக்கப்படுவதற்கான நிலத்தையும் தாமே தேர்ந்தெடுத்தார்.

கோட்டையூர். காரைக்குடி அருகே உள்ள ஓர் ஊர். தன வணிகர்கள் (நகரத்தார்), கோட்டையைப் போன்ற பெரிய பெரிய வீடுகளைக் கட்டி வாழ்ந்து வந்ததால் இப்பெயர் பெற்றது. 'சொற்கேட்ட விநாயகர்' என பெருமையுடன் அழைக்கப்படும் மிகுந்த வரப் பிரசாதியான 'சொக்கட்டான் விநாயகர்' இவ்வூரில் தான் அமைந்திருக்கிறார். இவ்வூரையே தனக்கான சமாதித் தலமாகத் தேர்ந்தெடுத்தார் சுவாமிகள்.

ஆவ்வூரை ஒட்டியுள்ள அழகாபுரிப் பகுதியை அடுத்த சக்திநகர் என்ற இடத்தில் தனக்குச் சமாதி அமைக்க வேண்டும் என்றும், அதற்கான குழியும் அங்கே அமைந்திருக்கும் என்றும் அடியவர்களிடம் கூறினார். அடியவர்கள் அவ்வாறே அப்பகுதிக்குச் சென்று பார்க்க அதேபோன்று அக்குழி அமைந்திருப்பதைக் கண்டனர். சுவாமிகளின் ஆணைப்படி சமாதி செய்விக்க அந்நிலத்தை விலைக்கு வாங்க முற்பட்டனர்.



ஆனால் அதன் உரிமையாளர்கள் அதனை விற்கச் சம்மதிக்க வில்லை. பலமுறை எடுத்துக் கூறியும் உரிமையாளர்கள் பிடிவாதமாக இருந்தனர். அடியவர்கள் சுவாமிகளிடம் சென்று நடந்ததைக் கூறினர்.

சுவாமிகள் அவர்களிடம், "இப்பொழுது சென்று அந்நிலத்தைக் கேளுங்கள். கொடுத்து விடுவார்கள், என் சமாதி அங்குதான் எழுப்பப்பட வேண்டும். வரும் வைகாசி விசாக தினத்தன்று நான் சமாதி அடைந்து விடுவேன். ஆனாலும், அதன் பிறகு என்னை நாடி வருபவர்களின் அனைத்துச் சிக்கல்களையும் போக்கி அவர்கள் வாழ்வில் நன்மை விளையச் செய்வேன். நான் மறைந்து பல ஆண்டுகள் ஆன பிறகு இப்பகுதி பொலிவடையும். சீரும் சிறப்பும் மிக்க அழகிய நகராகவும் உருவாகும்" என்று கூறி ஆசிர்வதித்து அனுப்பினார்.

மீண்டும் சென்று அடியவர்கள் உரிமையாளரிடம் நிலத்தைக் கேட்டனர். சித்தரின் ஆசிபெற்றுச் சென்றதால் அந்த அருள் வேலை செய்தது. அதியசப்படும் வகையில் நிலத்தின் உரிமையாளர் அந்த இடத்தை விற்கச் சம்மதித்தார்.

## மகாசமாதி

ஆறுமுக சுவாமிகள் தாம் கூறியவாறே முருகனுக்கு மிகவும் உகந்த தினமான வைகாசி விசாகத்தன்று, (மே 18, 1981) பௌர்ணமியுடன் கூடிய விசாக நட்சத்திர நாளில் மகாசமாதி அடைந்தார்.

## சமாதி அமைவிடம்




புதுக்கோட்டையில் இருந்து காரைக்குடி செல்லும் வழியில் உள்ளது கோட்டையூர். அவ்வூரில்தான் ஸ்ரீ ஆறுமுக சித்தரின் சமாதி ஆலயம் அமைந்துள்ளது. கோட்டையூர் பேருந்து நிலையத்திற்கு அருகே உள்ள சிவன் கோவிலுக்குப் பின்புறம், அழகாபுரி–சக்திநகர் பாதையில் சுமார் 2 கி.மீ. தொலைவில் சுவாமிகளின் சமாதி ஆலயம் உள்ளது. தினந்தோறும் இங்கு வழிபாடுகள் நடக்கின்றன. ஒவ்வோர் ஆண்டும் வைகாசி மாதம் விசாக நட்சத்திர நன்னாளில் குருபூஜை மிகச்சிறப்பாக நடந்து வருகிறது.



ஒவ்வொரு வியாழக்கிழமையும் இங்கு சாது வழிபாடு நடக்கிறது. அன்று இங்கு வந்து இரவில் தங்குவதும், அன்னதானம், இனிப்பு வகைகளைத் தானம் செய்வதும் அளவற்ற நற்பலனைத் தருகிறது.

எச்சிக்கலும் போக்கும் சித்தர் ஸ்ரீ ஆறுமுக சுவாமிகள் திருவடிகளே சரணம்!

அமெரிக்காவில் இருந்து வெளிவரும் தென்றல் மாத இதழில் இருந்து இக்கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு நாம்நகரத்தார் மின்னிதழ் சார்பாக நன்றிகள் .

# வாங்க பேசலாம்..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)

பகுதி –18

– பேரா. கு. அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம் ...வாங்க பேசலாம் ..!



## உசத்தி (ஒசத்தி)

"ஏன்டா! முத்து, என்னைக் காட்டிலும் உன் பொண்டாட்டி உனக்கு ஒசத்தியாப் போயிட்டா. நான் உன்ன பெத்து வளத்தவடா மறந்துறாத" என்று கோபத்தில் பேசும் ஆத்தாக்களின் வார்த்தைகளில்,உசத்தி என்பதே ஒசத்தி என்று சொல்லப்படுகிறது. உசத்தி என்பதற்கு உயர்வானது என்பது பொருள்.

### உசுப்பு

ஆத்தா! மார்கழி மாசமான 4 மணிக்கே உசுப்பிவிட்டுர்ற. சொகமா தூங்கிக்கிட்டு இருந்தேன். போ ஆத்தா" என்று சிணுங்குகின்ற பெண்களின் வார்த்தைகளில், உசுப்பு என்பது எழுப்பிவிடுதல் என்ற பொருளைத் தரும்.

### உசும்பு



சரசு! தொட்டில்ல பிள்ளை உசும்புற மாதிரி இருக்கு. என்னன்னு பாரு. என்று இரவில் கணவன்மார்கள் சொல்வதைக் கேட்டிருப்போம். இங்கு உசும்பு என்பது அசைதல் என்ற பொருளைத் தரும்.

### உட்கார்

"எம்புட்டு நேரம் நட்டமே நின்னுக்கிட்டு இருப்பீக. கால்கடுக்கும். உக்காருங்க சம்பந்தி" என்று பேசுவதில், உட்கார் என்பது வீற்றிருத்தல் அல்லது அமர்தல் என்ற பொருளைத் தரும்.

உள்–உள்கு–உள்குறு–உள்குறு தல்–உள்கார் தல்–உட்கார் தல் என வரும். மலையாளத்தில் இங்கே உட்கார் என்பதை, "இவ்விடெ உள்ளு" என்று இன்றும் சொல்வது வழக்கம்.

### உடந்தை

"பங்காளி! நாம நெனச்சது சரிதான். அவனுக ரெண்டு பேரும் கூட்டுக்களவாணிக. ஒருதனுக்கொருத்தன் உடந்தையா இருந்து வேலை பார்த்துருக்கிறானுக. இன்னக்கி மாட்டிக்கிட்டாங்க" என்பதில் உடந்தை என்பது துணை, உறவு, கூட்டாளி என்ற பொருள்களைத் தரும்.

### உடல் கனத்தல்

"என்ன மணி! போன வருஷம் திருவிழாவுல பார்த்தோம். சென்னையில வேல கிடைச்சிருச்சுன்னு சொன்ன. இந்தத் திருவிழாவுல உடம்பு கனத்துருச்சே? நல்ல வேலையில சேந்துட்ட போருக்கு," என்பதில் உடல் கனத்தல் என்பது உடம்பு பெருத்தல், குண்டாதல் என்ற பொருள்களைத் தரும்.

### உடும்புப் புடி (உடும்பு போல் பிடித்துக்கொள்வது)



உடும்பு என்பது நம் நாட்டின் பெரும்பான்மையான மாநிலங்களில் காணப்படும் பல்லி வகை. உடும்பின் கால்களும், நகங்களும் மிகவும் வலிமையானவை. ஒரு பொருளைப் பிடித்துக் கொண்டதென்றால், அதன் பிடியை விடவே விடாது. " இந்த கோவிந்தன் பய சொன்னதையே சொல்லிக்கிட்டு, உடும்புப்புடியா புடிச்சுக்கிட்டு திரியறானே. அவனுக்கு யாருதான் புரியவைக்கிறது?" இங்கு ஒருவர் கொண்ட கருத்திலிருந்து யார் நினைத்தாலும், எவ்வளவு முயன்றாலும் அவரை மாற்ற முடியாத போது உடும்புப்பிடி என்ற வார்த்தையைப் பயன்படுத்துவர்.

## உடைசல்



"ஐயா! இந்த ஒட்ட ஒடசல் சாமானை எல்லாம் எப்பத்தான் தூக்கிப் போடுவீங்க! வாசல்லயே கிடக்கு. சகிக்கலை."பழம் பொருள்களின் பெருமைஅறியாத பேரன்கள் ஐயாக்களிடம் இவ்வாறு பேசுவதைக் கேட்டிருக்கலாம். உடைசல் என்பது உடைந்த பொருள்களைக் குறிக்கும்.

– தொடர்ந்து பேசுவோம்






# முருங்கைக்காய் சூப்

தற்போது மாறி வரும் பருவநிலை காரணமாக குழந்தைகளுக்கு சளி காய்ச்சல் போன்ற உபாதைகள் அதிகம் ஏற்படும். பலர் இதன் காரணமாக காய்ச்சி ஆற வைத்த தண்ணீர் குடிப்பது, பூண்டு மிளகு சேர்த்து ரசம் சாப்பிடுவது என பலவற்றை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ள துவங்கி இருப்பார்கள்.உங்கள் வீட்டிலும் சிலர் சளி, இருமலால் அவதிப்பட்டு கொண்டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்கு நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் வகையில் சூப் செய்து கொடுங்கள்.

முக்கியமாக உங்கள் வீட்டில் முருங்கைக்காய் இருந்தால், அதை வைத்து சூப் செய்யுங்கள். இந்த முருங்கைக்கீரை சூப் மாலை வேளையில் காபி, டீ–க்கு பதிலாக குடிக்க ஏற்றதாக இருக்கும். முக்கியமாக இந்த சூப் உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிப்பது மட்டுமின்றி, உடலில் இரத்தத்தை அதிகரிக்கவும் உதவுகிறது.

உங்களுக்கு முருங்கைக்காய் சூப் எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? இந்த இதழில் முருங்கைக்காய் சூப்பின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

### தேவையான பொருட்கள்:

- 4 முருங்கைக்காய்
- 1 டேபிள்ஸ்பூன் துவரம் பருப்பு
- 1 வெங்காயம்
- 3 டேபிள்ஸ்பூன் நறுக்கிய பூண்டு
- 1 சிறிய தக்காளி
- 1 டேபிள்ஸ்பூன் மிளகு
- 1 டேபிள்ஸ்பூன் உப்பு (உங்கள் சுவைக்கேற்ப சரிசெய்யவும்)
- 1 டேபிள்ஸ்பூன் கொத்தமல்லி இலைகள்

### தாளிக்க:

- 1 ஸ்பூன் எண்ணெய்
- 1 பிரியாணி இலை
- 1 துண்டு இலவங்கப்பட்டை
- 2 கிராம்பு



**செய்முறை:**

- முருங்கைக்காயை கழுவி, சிறுசிறு துண்டுகளாக நறுக்கவும். ஒரு பாத்திரத்தில் முருங்கைக்காய் துண்டுகளை 4 கப் தண்ணீர் சேர்த்து வேகவைக்கவும்.
- முருங்கைக்காய் வெந்ததும், தண்ணீரை வடிகட்டாதீர்கள், ஏனெனில் இந்த தண்ணீரில் முருங்கைக்காயின் ஊட்டச்சத்துக்கள் நிறைந்திருக்கும். எனவே, முருங்கைக்காயை வேகவைத்த தண்ணீரை சூப்பிற்கு பயன்படுத்தவும்.
- முருங்கைக்காயை வடிகட்டி தனியாக வைக்கவும். ஒவ்வொரு துண்டு முருங்கைக்காயிலிருந்தும் அதிலுள்ள சதையை தனியாக எடுத்து வைத்துக்கொள்ளவும்.
- பருப்பையும் இதேபோல வேகவைத்துக் கொள்ளவும்.
- ஒரு கடாயை சூடாக்கி அதில் எண்ணெயை ஊற்றவும். பின்னர் தாளிக்க கொடுத்துள்ள பொருட்களைச் சேர்த்து ஒரு நிமிடம் வதக்கவும்.
- பின்னர் பொடியாக நறுக்கிய வெங்காயம் மற்றும் பூண்டை ஒரு சிட்டிகை உப்பு சேர்த்து வெங்காயம் கண்ணாடி பதத்திற்கு வரும் வரை வதக்கவும்.
- வெங்காயத்துடன் நறுக்கிய தக்காளி மற்றும் மிளகுத்தூள் சேர்த்து தக்காளி மென்மையாகும் வரை வதக்கவும். தக்காளி வெந்ததும், வேகவைத்த பருப்பைச் சேர்த்து நன்கு கலக்கவும்.
- முருங்கைக்காய் தண்ணீரை வாணலியில் சேர்த்து, சூப் கலவையை மிதமான தீயில் கொதிக்க விடவும்.

– சதையில் பாதியை தனியாக வைத்துவிட்டு பாதியை சூப்பில் சேர்த்து கலக்கவும். பின்னர் முருங்கைக்காய் சூப்பை மிதமான தீயில் 10 நிமிடங்கள் கொதிக்க விடவும். தேவையான அளவு உப்பு சேர்க்கவும்.

– பின்னர் மீதமுள்ள முருங்கைக்காய் சதையை சேர்த்து மிதமான தீயில் கொதிக்க வைத்து மிளகுத்தூள் மற்றும் கொத்தமல்லி சேர்த்து இறக்கினால் சுவையான மற்றும் ஆரோக்கியமான முருங்கைக்காய் சூப் ரெடி!

**கட்டுரையாக்கம்:**
**உமாராணி சொக்கலிங்கம்.**
**நற்சாந்துபட்டி ஈரோடு.**






இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். வாசகர்கள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# தனிமையின் வலிகள்

தனிமையின் வலிகள் உணர்ந்திடப் புரியும்
உள்ளுக்குள் வெறுப்பு நெருப்பாய்த் தகிக்கும்

உன்னை உனக்குப் பிடித்திட மறுக்கும்
உலகத்தைக் கண்டிட விழிகள் தயங்கும்

இரவினில் தூக்கம் தவிர்த்திட முனையும்
என்ன வாழ்க்கை என இதயம் பேசும்

யாரிடம் சொல்வது குழப்பங்கள் மிஞ்சும்
அச்சம் வந்தே நெஞ்சத்தில் இணையும்

வேதனை நிலைத்து ஆனந்தம் குறையும்
விதிப்படி வாழ்வெனத் தேற்றிட முயலும்



கவிச்சுடர்
தஞ்சை பழ வள்ளியப்பன்
மதுரை



## பெண் கதவு.... ஆண் பூட்டு..! – 18



# மௌன விரதம்

நல்லாசிரியர்
சேவு.முத்துக்குமார்
காரைக்குடி
+91 94432 88931

எத்தனை கோபத்திலும் வார்த்தைகளை விட்டு விடாதீர்கள் அடிகள் தரும் வலியைவிட வார்த்தைகள் தரும் வலி அதிகம், பின் எத்தனை முறை மன்னிப்பு கேட்டாலும் ஆறாத காயம் அது.



கணவர் நன்றாக இருக்க வேண்டும், தாலி நிலைக்க வேண்டும் என்று கோயில் கோயிலாகச் சென்று சுமங்கலி விரதம் இருக்கும் பெண்கள் சற்று வேறு விதமாகச் சிந்தித்தால், அவர்கள் கணவரைவிட மகிழ்ச்சியான மனிதர்கள், இவ்வுலகில் இருக்கமாட்டார்கள், ஆம் அவர்கள் இருக்க வேண்டியது சுமங்கலி விரதமல்ல, மௌன விரதம், மௌன விரதமே. மகத்தானது. பேச்சு, எண்ணம், செயல் இவற்றை நிறுத்தி மனதை இறைச்சிந்தனையில் செலுத்துவதே மௌன விரதமாகும்.

இத்தகைய விரதத்தைக் குடும்பத்தில் மனைவியானவள் மேற்கொண்டால் பெரும்பாலான ஆண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைவதோடு இல்லத்திலும் இறையருள் பரவும். ஆனால் மௌனவிரதம் இருப்பது பெண்களுக்கு மிகவும் கடினமானது.

என்னை எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள் அல்லது பட்டினி போடுங்கள். ஆனால் பேசாமல் இரு என்று மட்டும் சொல்லாதீர்கள் என்பதே அவர்களின் குரலாக இருக்கிறது.

ஆண்கள் மௌனவிரதத்தைக் கடைபிடிக்க ஆசைபட்டாலும், அவர்களை பெரும்பாலான பெண்கள் இருக்க விடுவதில்லை. மனைவியின் அதிகாரமான பேச்சுக்கு, மௌனத்தையே பரிசாகத் தரும் கணவன், ஒரு கட்டத்தில் எல்லை மீறி அடித்தும் விடுகிறான்.



அடிவாங்கிய மனைவி ஊரைக் கூட்டி அழுது ஆர்ப்பாட்டம் செய்து,"இதை கேட்பதற்கு யாருமே இல்லையா?" என கணவனின் மானத்தை வாங்கிவிடுகிறாள். ஆனால் சில வீடுகளில் அடியையும் வாங்கிக் கொண்டு, தன்மானத்திற்குப் பயந்து வெளியேயும் சொல்லாமல் அமைதி காக்கும் ஆண் மகன்களும் இருக்கிறார்கள். அவர்களெயெல்லாம் வணங்கப்பட வேண்டியவர்கள்.

'உண்ணாவிரதம்' என்பது, உடலை பட்டினி போட்டு உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்துவது போல 'மௌனவிரதம்' என்பது மனதை பட்டினி போட்டு மன எண்ணங்களை மேம்படுத்துவது ஆகும். இன்றைய நிலையில் பெரும்பாலான ஆண்கள் மனைவியிடம் எதிர் பார்ப்பது மௌனவிரதமே. அதை பெண்கள் கடைபிடித்தால் குடும்பம் சிறக்கும்.

நன்றி : ஓவியம். மோகன் மணிமாலா

# எதையும் பாசிட்டிவாகப் பார்ப்பது எப்படி?

ஆயிரக்கணக்கான பணக்காரர்களைச் சந்தித்து, அவர்கள் வெற்றி பெற்றதற்கான காரணங்களை ஆராய்ந்த போது, நாள் முழுவதும் பாசிட்டிவாக இருந்தது கண்டறியப்பட்டது.

இது எப்படி சாத்தியம்? இதற்கு ஏதேனும் உத்தி இருக்கிறதா? ஆம், இந்த உத்திக் குப் பெயர் INTERNAL POSITIVE COMMUNICATION... அப்படியென்றால் என்ன?



அதாவது, ஒவ்வொரு மனிதரும் பிறரோடு பேசுவதை விட தம் மனதிற்குள் பேசிக்கொள்கிற நேரமே அதிகம். இந்தப் பேச்சு நெகட்டிவாக இருந்தால் அவருடைய சிந்தனையும் நெகட்டிவாகவே இருக்கும். இதனால் எதைப் பார்த்தாலும் அதில் குற்றம் குறைகளே அவர் கண்ணுக்கு தென்படும்.

ஒருவேளை மனதுக்குள் பேசுகிற பேச்சு பாசிட்டிவாக இருக்குமானால் வாழ்க்கையும் பாசிட்டிவாக அமையும்.

பணக்காரர்கள் தங்கள் வாழ்க்கையில், நெகட்டிவான சம்பவங்கள் நடந்தாலும் கூட அதிலுள்ள பாசிட்டிவான அம்சங்களையே தம் மனதிற்குள் அனுப்புகிறார்கள், அவர்கள் தோல்வியைக் கண்டு துவளாததற்கு இதுதான் காரணம்.




உலகமே 'முடியாது', 'முடியாது' என்று சொன்னாலும் கூட 'ஏன் முடியாது? என்னால் நிச்சயம் முடியும்' என்றே மனதிற்குக் கட்டளையிடுகிறார்கள்.

அன்றைய தாமஸ் ஆல்வா எடிசனில் தொடங்கி இன்றைய அம்பானி, அதானி வரை எல்லோருமே தடைகளைக் கடந்தே வந்தவர்கள்; பிரச்சனைகளை எதிர்கொண்டே வளர்ந்தவர்கள். ஆனால் எப்போதும் மனதிற்குள் பாசிட்டிவாகவே பேசிக் கொள்பவர்கள்.

ஒரு முறை பிரபல தன்னம்பிக்கை எழுத்தாளர் காப்மேயரிடம் ஒரு இளைஞன் கேட்டான்: "உங்கள் எழுத்துக்களைப் படிக்கிற போது மிகவும் தன்னம்பிக்கையோடு இருக்கிறேன். ஆனால், ஒரு வாரம் கழித்து அந்தத் தன்னம்பிக்கை வடிந்து போகிறது. நான் தன்னம்பிக்கையைத் தக்க வைத்துக் கொள்ள என்ன செய்ய வேண்டும்?" என்று.

அதற்கு காப்மேயர் சொன்ன பதில், நீ புத்தகத்தைப் படிக்கிற போது உன் மனம் முழுவதும் தன்னம்பிக்கையால் நிரம்பி வழிகிறது. ஆனால் யதார்த்த வாழ்க்கையில், உன்னைச் சுற்றி இருப்போர் தன்னம்பிக்கை அற்று இருப்பதால், உன்னுடை தன்னம்பிக்கையும் வடிந்து போகிறது. எனவே தன்னம்பிக்கை தரக்கூடிய புத்தகங்களை மீண்டும் மீண்டும் படிப்பது, இதே சிந்தனை கொண்ட மனிதர்களை அடிக்கடி சந்திப்பது, தொடர்ந்து அவர்களோடு தொடர்பில் இருப்பது, நாம் பெற்ற வெற்றிகளை திரும்பத் திரும்ப எண்ணிப் பார்ப்பது என மனதிற்குள் தன்னம்பிக்கை விதைகளை விதைத்துக் கொண்டே இருந்தால், இது நிலைத்து நிற்கும். இதைத்தான் வெற்றியாளர்கள் செய்கிறார்கள்" என்றார்.

ஆம்! ஆன்மீகத்திலும் இதற்கு உதாரணம் உண்டு.





ஐயப்பன் கோவிலுக்குச் செல்ல மாலை அணிந்தோர் நாள்தோறும் இரண்டு முறை குளிப்பது, கோவிலுக்கு தினமும் செல்வது, காவி உடை உடுத்துவது, செருப்பு அணியாமல் இருப்பது, தாடி வளர்த்துக் கொள்வது, அசைவ உணவுகளைச் சாப்பிடாமல் அறவே தவிர்ப்பது, குழுவினரோடு சேர்த்து நாள்தோறும் பக்திப் பாடல்களைப் பாடுவது என அந்த உணர்விலேயே இருப்பதைக் காணலாம்.

அதுபோலத் தான் பணக்காரர்களும் எப்போதும் அந்த உணர்விலேயேயேயேயேயே... இருக்கிறார்கள்.

இதற்கு தான் INTERNAL POSITIVE COMMUNICATION என்று பெயர்.

வெளியில் நீங்கள் தன்னம்பிக்கையோடு பேசுவதும், பேசுவதாகக் காட்டிக்கொள்வதும் முக்கியமல்ல ! உங்களுக்குள் நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் அல்லது உங்கள் மனம் ஒரு நிகழ்வை எப்படி உள்வாங்கிக் கொள்கிறது என்பதே முக்கியம்!

சில உதாரணங்களைப் பார்ப்போம் !



நம் அலுவலக உதவியாளர் விடுப்பு எடுத்துவிட்டால், உடனே, "கிறுக்குப் பய வர வர நிறைய லீவு எடுக்கறான் ! முன்னாடியே சொல்றதும் இல்ல. வேற நல்ல ஆளப் பார்க்கணும்" என்று தான் நம் மனதுக்குள் குரல் ஒலிக்கும். மாறாக, 'இதுவும் ஒரு வகையில் நல்லது தான். இவரை நாம் எந்த அளவிற்கு சார்ந்திருக்கிறோம் என்பதை தெரிந்து கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு ! இனி வரும் நாட்களிலும், இவர் லீவு போட்டால், அலுவலக வேலை பாதிக்காமல் இருக்க இவரது வேலையை மேற்கொள்ள அடுத்த ஆளையும் நாம் பழக்கலாமே!' என்று மனதை மாற்றி சிந்திக்கச் செய்ய வேண்டும்.

நமது வாடிக்கையாளர் நம்மைத் திட்டினால், 'நீ கொடுக்கிற காசுக்கு இதை விட எப்படி சேவை செய்ய முடியும்?' என்று தான் நம் ஈகோ உடனே சண்டை போடத் தூண்டும். ஆனால் ஈகோவை ஓரங்கட்டி விட்டு, " சாரி சார்! நான் சரி பண்ணித்தர்றேன்" என்று சொல்லக் கற்றுக் கொண்டு, பிறகு நம் குறைகளைக் களைய இது ஒரு வாய்ப்பு என்று எண்ணி, இனி எதிர்காத்தில் இந்தப் பிரச்சனை வராமல் இருக்க என்ன செய்யலாம்? என்று யோசிக்க மனதைப் பழக்க வேண்டும்.

'உன்னால் இந்தப் பொருளை விற்க முடியாது' என்று உலகம் சொன்னால். நீங்கள் தளர்ந்து விடாமல், முன்பு இந்தப் பொருளைப் பிறரால் விற்க முடியவில்லை. அதனால் தான் இப்படிச் சொல்கிறார்கள். ஆனால், என்னால் இந்தந்த உத்திகளைப் பின்பற்றி விற்க முடியும்' என்று மனதுக்குள் எண்ண வேண்டும்.



நினைவில் கொள்ளுங்கள்... பந்து எப்படி வீசப்பட்டாலும் அதை அடித்து நான்கு, ஆறு என ரன்களை எடுத்துக் கொண்டே இருப்பவர் தான் சிறந்த கிரிக்கெட் வீரர். அதுபோலத்தான் வெளி உலகம், சூழலை எப்படி மாற்றி அமைத்தாலும் அதை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்பவர்களே வெற்றியாளர்கள்.

உங்கள் இலக்கு எதுவாக இருந்தாலும் அதை நிச்சயம் அடைய வேண்டுமானால் அதற்கு நீங்கள் பின்பற்ற வேண்டிய உத்தி மனதிற்குள் தொடர்ந்து பாசிட்டிவான சிந்தனைகளை விதைத்துக் கொண்டே இருப்பது தான்.


நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும் அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas - USA


## மரம் தரும் மழை



மண்ணைத் தோண்டி விதைபோடு
... மறக்காமல் தினம் நீரூற்று
மண்ணுக்குள்ளே வேர் பரப்பும்
... வளர்ந்து உயர்ந்து கிளை பரப்பும்
உண்ணும் கனிகள் தினம் கொடுக்கும்
... சுவாசம் செய்யக் காற்று தரும்
விண்ணில் மேகம் உருவாக்கும்
... வீட்டுக்கிணற்றில் மழை நிறப்பும்!

## ஔவையின் ஆத்திச்சூடி

"அறம் செய விரும்பு" அனுதினமும்
"ஆறுவது சினம்" நலம் கொடுக்கும்
"உத்தமனாய் இரு" உன்வாழ்விலும்
"ஊருடன் கூடிவாழ்" உயர்வாகிடும்
"வைகறை துயிலெழு" சிறப்பாகிடும்
"பெரியாரைத் துணைக்கொள்" பலன் கூடிடும்
ஔவைப் பாட்டி சொன்னதின்னும்
ஆத்திச் சூடியில் நிறைந்திருக்கும்!



# பூங்காவிற்கு வக்காலத்து

பூங்காவில் தானே பூக்களும் கருவாகிப் பிறக்கும்
நின்று கொண்டே உழைக்கும் பூங்காவும் சிறக்கும்

பூக்களைப் பறிக்காதீர் பலகையும் அங்கங்கு இருக்கும்
மனிதனின் கைகளோ பலகையைப் பார்த்த பின் பறிக்கும்

முன்பெல்லாம் நீரினைத் தருவார்கள் பாசமாக
இப்போது தருவதோ சொட்டு நீரைப் பாசனமாக

மனிதர்கள் யார் வளர்ந்தாலும் தலையில் கொட்டுவார்கள்
செடிகள் கொஞ்சம் வளர்ந்த பின் விடுவார்களா வெட்டுவார்கள்

மனிதர்களின் விடுமுறை அவர்களின் பலத்தைத் தான் காட்டும்
அவர்களின் தொல்லையால் பூங்காவின் வேலை பளுவைக் கூட்டும்

பூங்காப் பூக்களைப் பார்வையிட்ட மகிழ்ச்சியில் குழந்தைகள்
குழந்தையைப் பார்த்து பூக்கள் ஆகின பூங்காவின் மழலைகள்

பூங்காப் பூக்களை தென்றலும் உறவாகி உரசும்
மலர்களின் மனதில் குழந்தையின் நிறைவான ஸ்பரிசம்

பூங்காவில் புகைப்படம் எடுக்காதோர் இங்கு இல்லை
பூங்காவின் பார்வைக்கு கொடுப்பவர் யாரும் இல்லை



– கவிஞர் எம்.சோலை.
காரைக்குடி



# வாழ்த்தி மகிழ்வோம்...

**அன்பார்ந்த வாசகர்களே..**

நமது மின்னிதழில் வாழ்த்தி மகிழ்வோம் பகுதியில் வாசகர்கள் இனி தங்கள் குடும்ப உறுப்பினர்கள் திருமணம், பிறந்த நாள், சஷ்டியப்த பூர்த்தி, சதாபிஷேகம் இன்னும் பல இனிமையான தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் வாசகர்களோடு பகிர்ந்து மகிழலாம்.

**அட்டைப்படம் மற்றும் இதழில் ஒரு பக்க செய்திக்கான கட்டணம் : ரூபாய் 3000 மட்டும்**

**இதழில் ஒரு பக்கச்செய்தி : ரூபாய் 500 மட்டும்**

இனிய தருணங்களை உலகளாவிய நமது நகரத்தார் குடும்பங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள்.

**தங்களது இல்ல நிகழ்வுகளை வெளியிட இதழின் மின்னஞ்சல் முகவரி**

naamnagarathar@outlook.com

**அல்லது**

**96590 32994 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்**

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர்கள் கார்த்திக் முத்தப்பன் (கண்டனூர்) மற்றும் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும், ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தை பற்றிய விரிவான பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் அறியலாம்.

**இந்த இதழில் ஒரு நிறுவனத்தை பற்றிய விரிவான பகுத்தாய்வு.**

கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் ) நகரத்தார் கேப்பிட்டல் – சென்னை

**நிறுவனத்தை பற்றி:–**

EPACK PREFAB

RAPID CONSTRUCTION·EXCEEDING EXPECTATIONS

EPACK PREFAB TECHNOLOGIES LIMITED (544540/EPACKPEB)

கிரேட்டர் நொய்டாவின் முக்கிய இடத்தில் 1999 இல் நிறுவப்பட்ட EPACK PREFAB TECHNOLOGIES LIMITED, ISO 9001:2015 மற்றும் ISO 14001:2015 அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகும்.

கிரேட்டர் இந்த நிறுவனம் பொறியியல் வடிவமைப்பு, உற்பத்தி மற்றும் திட்ட மேலாண்மை ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றது, பல்வேறு வகையான தொழில்களுக்கு விரிவான முன்– பொறியியல் கட்டிட தீர்வுகளை வழங்குகிறது. முன்–பொறியியல் செய்யப்பட்ட எஃகு கட்டிடங்களுக்கு கூடுதலாக, EPACK Prefab பல்வேறு சிக்கலான சுயவிவரங்களில் குளிர் ரோல்–வடிவமைக்கப்பட்ட பிரிவுகளுக்கான மேம்பட்ட உற்பத்தி வசதிகளைக் கொண்டுள்ளது. இவை விமான நிலைய முனையங்கள், தளவாடங்கள், கட்டுமானம், ஆட்டோமொபைல்கள், ரயில்வே, பொருள் கையாளுதல், மின் உற்பத்தி, மருத்துவமனைகள், பள்ளிகள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பரந்த அளவிலான தொழில்களுக்கு ஏற்றவை.

Epack Prefab Technologies, 25 ஆண்டுகளுக்கும் மேலான பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது,
இரண்டு வணிகப் பிரிவுகளாக செயல்படுகிறது,
அதாவது

(I) Pre–Fab வணிகம், இதில் அவர்கள் வாடிக்கையாளர்களுக்கு ஆயத்த தயாரிப்பு அடிப்படையில் முழுமையான தீர்வுகளை வழங்குகிறார்கள்.

மற்றும்

(ii) இந்தியாவில் கட்டுமானம், பேக்கேஜிங் மற்றும் நுகர்வோர் பொருட்கள் போன்ற பல்வேறு தொழில்களுக்கான விரிவாக்கப்பட்ட பாலிஸ்டிரீன் தாள்கள் மற்றும் தொகுதிகள் உற்பத்தி ("EPS பேக்கேஜிங் வணிகம்"). செயல்பாடுகளிலிருந்து வருவாயைப் பொறுத்தவரை அவை வேகமாக வளர்ந்து வருகின்றன. இது ஆயத்த தயாரிப்பு அடிப்படையில் திட்டங்களையும் மேற்கொள்கிறது, இதில் அவர்கள் வாடிக்கையாளரின் தளத்தில் மதிப்பீடு, வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, போக்குவரத்து, நிறுவல் மற்றும் முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புகளை நிறுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான முன் தயாரிக்கப்பட்ட கட்டமைப்புகளை வழங்குகிறார்கள்.

இந்த நிறுவனம் தங்கள் ப்ரீ–ஃபேப் வணிக தயாரிப்புகளை 'EPACK PREFAB' என்ற பிராண்ட் பெயரிலும், EPS பேக்கேஜிங் வணிக தயாரிப்புகளை 'EPACK PACKAGING' என்ற பிராண்ட் பெயரிலும் விற்பனை செய்கிறது. CRISIL அறிக்கையின்படி, ப்ரீ–இன்ஜினியரிங் செய்யப்பட்ட எஃகு கட்டிடம் (PEB) துறையில் அவர்கள் மூன்றாவது பெரிய உற்பத்தி திறனைக் கொண்டுள்ளனர்.

அவர்கள் பன்முகப்படுத்தப்பட்ட சந்தை இருப்பையும் விரிவான சலுகைகளின் விரிவான போர்ட்ஃபோலியோவையும் கொண்டுள்ளனர். இது ப்ரீ–ஃபேப் வணிக தயாரிப்புகளை வழங்கி 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் திட்டங்களை நிறைவேற்றியுள்ளது.

**விரிவாக்கம் மற்றும் வளர்ச்சி முயற்சிகள்:–**

– ஆந்திரப் பிரதேசத்தில் ஒரு தனித்துவப்பட்ட சாண்ட்விச் பேனல் உற்பத்திக்கான கட்டமைப்பும்.

– மாம்பட்டுவில் கட்டமைப்பு எஃகு உற்பத்திக்கான கட்டமைப்பும். தர்ப்போது விரிவாக்கத்தைத் தொடங்கினர்.

– ராஜஸ்தானின் கிலோத்தில் சாண்ட்விச் பேனல்களுக்கான கட்டமைப்பும், விரிவாக்கத்தையும் தொடங்கினார்

Epack நிறுவனம் இந்தியா முழுவதும் 4 உற்பத்தி வசதிகளையும் 3 வடிவமைப்பு மையங்களையும் நிறுவியுள்ளது, இதற்கு இந்த நிதியாண்டில் 2 5 2 உறுப்பினர்களைக் கொண்ட திட்ட செயல்படுத்தல் குழு ஆதரவு அளித்துள்ளது. EPTL இன் மொத்த முன்–பொறியியல் திறன் 1,26,546 MTPA ஆகவும், சாண்ட்விச் இன்சுலேட்டட் பேனல் திறன் 5,10,000 சதுர மீட்டராகவும், பேக்கேஜிங் திறன் 8,400 MTPA ஆகவும் இருக்கிரது.

**முக்கிய தயாரிப்புகள் மற்றும் சேவைகள்:–**

– முன்–முடிந்த பொறியியல் எஃகு கட்டிடங்கள்

– முன்–முடிந்த கட்டமைப்புகள்

– மட்டுப்படுத்தபட்ட கட்டிடங்கள்

– லைட் கேஜ் எஃகு சட்டகம்

– சாண்ட்விச் காப்பிடப்பட்ட பேனல்கள்

– நிலையான மட்டுப்படுத்தபட்ட தீர்வுகள்

பல ஆண்டுகளாக, EPTL வலுவான மற்றும் நீண்டகால வாடிக்கையாளர் உறவுகளை உருவாக்கியுள்ளது. FY22–FY25க்கு இடையில், இது சஃபாரி உற்பத்தி லிமிடெட், செஞ்சுரி பேனல்ஸ் லிமிடெட், ஹேவல்ஸ் இந்தியா லிமிடெட், அசாஹி இந்தியா கிளாஸ் லிமிடெட், இந்தியா கிளைகோல்ஸ் லிமிடெட் போன்ற 2,020 க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்களுக்கு சேவை செய்தது. FY23–FY25 இடையில் வணிக, குடியிருப்பு, தொழில்துறை மற்றும் உள் கட்டமைப்பு பிரிவுகளில் 4,410 திட்டங்களை நிறைவு செய்துள்ளது. மீண்டும் மீண்டும் வரும் வாடிக்கையாளர்களிடமிருந்து வருவாய் FY23 இல் 40.3% இலிருந்து FY25 இல் 43.4% ஆக உயர்ந்துள்ளது, இது வாடிக்கையாளர் நம்பிக்கையை அடிக் கோடிட்டுக் காட்டுகிறது.

**அடிப்படைக் கண்ணோட்டம்:-**

5.91 ஒருங்கிணைந்த EPS (2025-03 அன்று முடிவடைந்த பன்னிரண்டு மாதங்கள் பின்தங்கியுள்ளது), 40.20 தொழில்துறை PE உடன் ஒப்பிடும்போது 45.62 ஒருங்கிணைந்த PE விகிதம் கொண்ட நிறுவனம்.

கடந்த 5 ஆண்டுகளில் நிறுவனம் 40.7% CAGR நல்ல லாப வளர்ச்சியை வழங்கியுள்ளது

சமீபத்திய கிடைக்கக்கூடிய தரவுகளின்படி, பிரமோட்டர்கள் 64.54% வைத்திருக்கிறார்கள். Whiteoak மூலதன ஃப்ளெக்ஸி கேப் ஃபண்ட் 3.13% வைத்திருக்கிறது & HDFC வங்கி லிமிடெட் 2.06% பங்குகளை வைத்திருக்கிறது.

## நிறுவன அடிப்படைகள்:–

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>**40.72** | EPS - TTM (₹)<br>**7.68** |
| MCap (₹ Cr.)<br>**3,150.68** | Sectoral MCap Rank<br>**14** |
| PB Ratio (x)<br>**9.01** | Div Yield (%)<br>**0.00** |
| Face Value (₹)<br>**2.00** | Beta<br>**-** |
| VWAP (₹)<br>**315.99** | 52W H/L (₹)<br>**344.00 / 179.32** |

**EPack Prefab Tech Share Price Insights**

**Employee & Interest Expense** –

Company has spent 1.87% of its operating revenues towards interest expenses and 7.18% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Standalone Financials)

**EPack Prefab Tech Share Price Update** +

**EPack Prefab Tech Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | ↓-0.02% |
| 1 Week | ↓-3.28% |
| 1 Month | ↑58.29% |
| 3 Months | N.A. |
| 1 Year | N.A. |
| 3 Years | N.A. |
| 5 Years | N.A. |

**INSIGHTS**

**Employee & Interest Expense**

Company has spent 1.87% of its operating revenues towards interest expenses and 7.18% towards employee cost in the year ending Mar 31, 2024. (Source: Standalone Financials)

| QUARTERLY \| ANNUAL | SEP 2025 | JUN 2025 | MAR 2025 | DEC 2024 | SEP 2024 |
|---|---|---|---|---|---|
| Total Income | 436.72 | 297.84 | 334.18 | 266.37 | 270.83 |
| Total Income Growth (%) | ↑46.63 | -10.87 | ↑25.46 | ↓-1.65 | ↑0.64 |
| Total Expenses | 389.62 | 269.53 | 299.81 | 243.92 | 244.28 |
| Total Expenses Growth (%) | ↑44.56 | -10.10 | ↑22.91 | ↓-0.15 | ↓-0.46 |
| EBIT | 47.11 | 28.32 | 34.37 | 22.45 | 26.55 |
| EBIT Growth (%) | ↑66.35 | -17.62 | ↑53.11 | -15.43 | ↑12.07 |
| Profit after Tax (PAT) | 29.47 | 16.03 | 20.02 | 11.62 | 14.43 |
| PAT Growth (%) | ↑83.87 | -19.95 | ↑72.23 | -19.43 | ↑8.89 |
| EBIT Margin (%) | 10.79 | 9.51 | 10.29 | 8.43 | 9.80 |
| Net Profit Margin (%) | 6.75 | 5.38 | 5.99 | 4.36 | 5.33 |
| Basic EPS (₹) | 3.44 | 2.07 | 2.58 | 1.50 | 1.86 |

▲ BACK TO TOP

மார்ச் 31, 2024 உடன் முடிவடைந்த ஆண்டில், நிறுவனம் தனது இயக்க வருவாயில் 1.87% வட்டிச் செலவுகளுக்காகவும், 7.18% பணியாளர் செலவுகளுக்காகவும் செலவிட்டுள்ளது. (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதி அறிக்கை)

| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Total Assets | 931.02 | 613.72 |
| Total Assets Growth (%) | 151.70 | 142.05 |
| Total Liabilities | 577.09 | 444.77 |
| Total Liabilities Growth (%) | 129.75 | 145.37 |
| Total Equity | 352.52 | 168.96 |
| Total Equity Growth (%) | ↑108.64 | 133.99 |
| Current Ratio (x) | 1.42 | 1.12 |
| Total Debt to Equity (x) | 0.60 | 0.86 |
| Contingent Liabilities | 393.75 | 318.30 |

**INSIGHTS**

**Increase in Cash from Investing**

Company has used Rs 150.99 cr for investing activities which is an YoY increase of 59.28%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 62.29 | 71.65 |
| Net Cash used in Investing Activities | -150.99 | -94.79 |
| Net Cash flow from Financing Activities | 166.47 | 23.11 |
| Net Cash Flow | 77.77 | -0.03 |
| Closing Cash & Cash Equivalent | 79.36 | 1.58 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | ↑4,913.01 | ↓-1.55 |
| Total Debt/ CFO (x) | 3.38 | 2.03 |

நிறுவனம் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு ரூ.150.99 கோடியைப் பயன்படுத்தியுள்ளது, இது ஆண்டுக்கு ஆண்டு 59.28% அதிகரிப்பு ஆகும். (ஆதாரம்: ஒருங்கிணைந்த நிதி அறிக்கை)

| ANNUAL | FY 2025 | FY 2024 |
|---|---|---|
| Return on Equity (%) | 16.82 | 25.42 |
| Return on Capital Employed (%) | 21.59 | 27.00 |
| Return on Assets (%) | 6.37 | 6.99 |
| Interest Coverage Ratio (x) | 5.13 | 5.12 |
| Asset Turnover Ratio (x) | 1.47 | 1.73 |
| Price to Earnings (x) | - | - |
| Price to Book (x) | - | - |
| EV/EBITDA (x) | - | - |
| EBITDA Margin (%) | 10.96 | 9.77 |

## தொழில்நுட்ப விளக்கப்படம்:–




## சக நிறுவன ஒப்பீடு:–

| S.No. | Name | CMP Rs. | P/E | Mar Cap Rs.Cr. | Div Yld % | NP Qtr Rs.Cr. | Qtr Profit Var % | Sales Qtr Rs.Cr. | Qtr Sales Var % | ROCE % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | Kaynes Tech | 6323.00 | 111.92 | 42386.03 | 0.00 | 121.41 | 101.64 | 906.22 | 58.40 | 14.28 |
| 2. | Honeywell Auto | 35451.00 | 60.72 | 31338.68 | 0.30 | 119.50 | 3.82 | 1149.40 | 12.26 | 18.40 |
| 3. | Jyoti CNC Auto. | 956.25 | 62.84 | 21747.31 | 0.00 | 85.50 | 12.68 | 507.90 | 17.93 | 24.35 |
| 4. | Aditya Infotech | 1627.00 | 96.88 | 19072.01 | 0.00 | 69.98 | 196.78 | 919.64 | 37.48 | 19.49 |
| 5. | Syrma SGS Tech. | 899.55 | 75.52 | 17346.09 | 0.18 | 66.34 | 76.77 | 1145.89 | 37.60 | 11.67 |
| 6. | LMW | 15500.00 | 137.68 | 16558.65 | 0.19 | 40.92 | 67.29 | 821.88 | 6.88 | 4.48 |
| 7. | Tega Inds. | 1948.30 | 54.83 | 12963.11 | 0.10 | 44.94 | 522.44 | 405.35 | 14.73 | 17.80 |
| 8. | EPack PrefabTech | 326.40 | 44.13 | 3278.77 | 0.00 | 29.47 | 104.23 | 433.94 | 61.89 | 23.71 |
| | Median: 121 Co. | 309.25 | 33.62 | 624.98 | 0.0 | 5.63 | 12.8 | 71.41 | 13.29 | 16.17 |


## பங்குதாரர் பங்கு அமைப்பு:–

**QOQ Change** Total Shareholdings



*Showing EPack Prefab Tech Shareholding as on Sep 2025*

| CATEGORY | SEP 2025 |
|---|---|
| Promoters | 64.54 |
| Pledge | 0.00 |
| FII | 3.00 |
| DII | 6.43 |
| Mutual Funds | 4.01 |
| Others | 26.03 |



*Showing Shareholding as on Sep 2025*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 6,48,34,088 | 64.54 % | - |
| Pledge | 0 | 0.00 % | - |
| FII | 30,13,468 | 3.00 % | - |
| DII | 64,57,612 | 6.43 % | - |
| MF | 40,25,542 | 4.01 % | - |
| Others | 2,61,46,829 | 26.03 % | - |

## ஆய்வாளரின் தனிப்பட்ட பார்வையில்:–

நிறுவனம் நன்கு அறியப்பட்ட Epack குழுமத்தைச் சேர்ந்தது. முன் பொறியியல் கட்டிடம் (PEB) மற்றும் முன் தயாரிக்கப்பட்ட கட்டுமானத் துறையில் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும்.

புதிதாக பட்டியலிடப்பட்ட நிறுவனம், எனவே தற்போது அடிப்படைகள் மற்றும் நிதிநிலைகளை அவ்வப்போது கவனிக்க வேண்டியது அவசியம்.

தனிப்பட்ட ஆய்வின்படி நடுத்தர கால (8 மாதங்கள் முதல் 1.5 ஆண்டுகள் வரை) முதல் நீண்ட கால (2 முதல் 3 ஆண்டுகள் வரை) முதலீட்டிற்கு எனது ஆய்வுக் கண்ணோட்டத்தில் நன்றாக இருக்கிறது. நடுத்தர காலத்தில் 450+ ஐக் காணலாம். நீண்ட காலத்திற்கு எனது படிப்புக் கண்ணோட்டத்தில் 600+ ஐ எதிர்பார்க்கிறேன்.

**இந்த இதழில் எமது ஆய்வு பார்வையில்**
**குறுகிய கால பங்குகள்(கழிவு மேலாண்மை துறை பங்குகள்) பரிந்துரைகள் :**

க.ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) நகரத்தார்கேப்பிட்டல் – சென்னை

1, EMS
**Ems Ltd...**
**Entry 490 - 500. Add more on down till 360.**
**Target 700, 900 and 1000**

2, GRAVITA
**Gravita India Limited...**
**Entry 1700 to 1750. Add more on down till 1300.**
**Target 2200, 2500 and 2800**

3, ION EXCHANGE
**Ion Exchange (India) Ltd...**
**Entry 350 to 370. Add more on down till 380.**
**Target 500, 650 and 800.**

4, POCL

**Pondy Oxides and Chemicals Ltd...**
**Entry 1350 to 1400. Add more on down till 1000.**
**Target 1800 and 2200**

5, CONCORD enviro

**Concord Enviro Systems Ltd...**
**Entry 400 to 410. Add more on down till 300.**
**Target 600 and 800.**

6, GESL

**Ganesha Ecosphere Ltd...**
**Entry 920 to 940. Add more on down till 700.**
**Target 1200, 1500 and 1800**

7, Tinna

**Tinna Rubber and Infrastructure Ltd...**
**Entry 880 to 900. Add more on down till 700.**
**Target 1100 and 1300**

8, ANTONY WASTE

**Antony Waste Handling Cell Ltd...**
**Entry 470 to 490. Add more on down till 360.**
**Target 700 and 900.**

9, ECO MOBILITY

**ECOS (India) Mobility & Hospitality Ltd...**
**Entry 220 to 240. Add more on down till 170.**
**Target 350 and 500.**

10, UFLEX

**Uflex Ltd...**
**Entry 500 to 520. Add more on down 400.**
**Target 700, 860 and 1000.**

**பொறுப்புத் துறப்பு**

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் பற்றிய தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது.

# NAGARATHAAR KAPITAL

**(Will learn and earn together in wealth creating Journey)**

## Webinar Course.

I. Stock Market Course (Beginners).
Basics, Fundamentals, Technical (Introduction).

II. Stock Market Course (Advanced).
Technical, Strategies.

## Why One Wealth Course?

Learn from Qualified and Experienced Expert Panelists.
Your search for in-depth Knowledge ends here.
You will become a Professional trader and Informed Investor.
Assist to Develops investment strategies to achieving financial goals
Got Learn about Different Market.
Personalized financial advice.

## Who can join?

I. Students.

II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.

III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.

IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

Our "Young Generation" can learn and start doing analysis to identify potential stocks @ Correct Entry / Correct Exit to win the Trade and by Investing in turn around stocks to create wealth by their own in reasonable period of time.

**Webinar Dates** Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
For November 2025 Class will be on 28/11/2025

**Webinar Timings** India Time: 17:30Hrs - 18.30Hrs / 21.00 - 22.00Hrs, On Week days & 17.00Hrs - 18.00Hrs / 20.00 - 21.00Hrs Week Ends.

# For further Details Contact: +91-9790755337 +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி......
# மீன லக்னம்..!



-ஜோதிடர் எல்லி
9894176494



நாம் நகரத்தார் மின்னிதழில் பயணிக்கும் வாசகர்கள் அனைவருக்கும் நெஞ்சார்ந்த வணக்கம்!

மகிழ்ச்சி தொடரட்டும் தங்கள் இல்லங்களில்.

லக்கினங்கள் பற்றிய ஆய்வில் மேஷம் தொடங்கி தற்போது கும்பம் வரையிலும் வந்தாயிற்று  இறுதியாக மீன லக்னம் தான் பாக்கி.

அதாவது தலைமுதல் அடி வரை எனலாம். தலையை குறிக்கும் ராசி மேஷம். அடியை அதாவது பாதத்தினை குறிக்கும் ராசி மீனம்.

இந்த தொடரின் வரிசையில் இறுதியான மீன லக்கனத்தை பற்றி இந்த இதழில் அறிந்து கொள்ளலாம்!



காலசக்கரத்தின் 12 வது பாவகம்!.
குரு பகவான் ஆட்சி வீடு!

போகம்! உணவு,  நீண்ட பயணங்கள், ஞானம்! மோட்சம்! அலைச்சல், செலவுகள்  வீட்டை தவிர வெளியில் தங்கும் வசதிகள், படுக்கை, மைதுனம், உணவுகள் இவற்றை குறிக்கும் பாவகம் மீனம் ஆகும்.

பொதுவாக 12 வது பாவகத்தை அயன சயன போக ஸ்தானம் என்பது வழக்கம். மீனம் காலப் புருஷ தத்துவ படி 12 வது பாவகமாக வருவதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இவைகள் பொதுவாகவே ஜாதகரை ஈர்க்கும்!

ஆகவே மீன லக்னம் உடையவர்கள் பொதுவான குணாதிசயங்கள் எப்படி இருக்கும் என்றால்

நன்றாக உணவருந்தி இளைப்பாறலை மனம் தேடும்!. சனி பகவான் லக்னம் அல்லது லக்னாதிபதி உடன் ஏதாவது ஒரு வகையில் தொடர்பு கொள்ளும் போதுதான் உடல் வருந்தி வேலை செய்யும் தொழில் இவர்களுக்கு ஏற்படும். இல்லை என்றால் மூளை வேலைதான் அதாவது டேபுள் வொர்க் அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு செய்யும் வேலைகள்.

ஆழ்மன சிந்தனை தியானித்து செயல்படல், ஆலோசனை வழங்கல் முதலிய சிறப்பம்சம்கள் இந்த லக்னத்திற்கு இயல்பாகவே BYஉண்டு!. முன்பு குறிப்பிடப்பட்டது போல ஓரிடத்தில் அமர்ந்து செய்யும் சிந்தனை சார்ந்த துறையே இவர்களுக்கு வெற்றியை ஈட்டி தரும்!.



பக்திமார்க்கம், ஆராய்ச்சி,சோதிடம், தொல்லியல் வரலாற்றுத்துறை, பத்திரிகை, எழுத்தாளர் இவற்றில் ஒன்றினை தேர்ந்தெடுத்தல் சிறப்பு. இந்த லக்னகாரர்கள் உடலுழைப்பு சார்ந்த பணிகளில் இருந்தால் பொதுவாக பெரிதாக முன்னேற்றம் பெற இயலாது!

துறை சார்ந்த ஆராய்ச்சி மனோ பாவம் இருக்கும் எனவே சரியான துறையை தேர்ந்தெடுத்திருந்தால் அதில் மேன்மை அடைய வாய்ப்பு உள்ளது..

தனுசு ராசி நெருப்பு தத்துவம் ஆகும். மீனகுரு என்பவர் நீர் தத்துவம் மற்றும் இரட்டை ராசி அதிபதி ஆகவே தனுசு குரு விலிருந்து மீன குரு மாறுபட்டவர்!

ஞானம் மோட்சத்தை அளிக்கும் இந்த 12ம் பாவகம் போகத்தையும் அளிக்க வல்லது எனவே சற்று எண்ணங்களை மடை மாற்றுதல் சிறப்பு.பஞ்சமாதிபதி யாக மனோகாரகன் சந்திரன் வருவதால் சிந்தனை மேலோங்கும் பொதுவாக புத்தி கூர்மையுள்ள புத்திரம் உண்டு.பெண் குழந்தைகளுக்கு வாய்ப்பு அதிகம்! குரு நிலையை பொறுத்து அறிவு கூர்மை, ஞானம் கொண்ட ஆண் குழந்தை பிறக்கும்.

மீனம் உபயலக்னம் என்பதை யாவரும் அறிவர்! எனவே நண்பர்கள், மனைவி, காதலி இவ்வகையில் ஜாதகரின் மன ஒட்டம் மிகும்!. எப்போதும் ஆழ்மனம் ஞானம், துறவறம் இவற்றை அசைபோட்டு கொண்டே இருக்க தோன்றும்.

இல்லறத்தில் மனைவிகளிடம் திட்டு வாங்குபவர்கள் அதிகமாக இவர்களாகத்தான் இருக்க கூடும்.

லக்னாதிபதி குரு வே கர்ம ஸ்தானாதிபதி யாகவும் வருவதால், ஆசிரியர், நீதிமன்றம், பத்திரிகை யாளர், எழுத்தாளர், அரசியல் ஆலோசகர் போன்ற உயரிய துறைகள் இயல்பாகவே கைகொடுக்கும்!.இளகிய மனம் கொண்டவர்கள்.விட்டு கொடுக்கும் மனப்பான்மை உண்டு. நீரில் விளையாடுவது, அடிக்கடி குளிக்கும் வழக்கம் இவர்களிடம் இருக்கும்.



சாப்பாட்டு பிரியர்கள் எல்லா வகையான உணவுகளையும் ருசித்து சாப்பிடுவார்கள். தாயார் போலவே மனைவியும் அமையும். சிலருக்கு மாமன் மகளே மனைவியாக வருவார், பெண் ஜாதகருக்கு அத்தை மகன் கணவராக வர வாய்ப்பு உள்ளது.

நிதி விசயத்தில் ரொம்ப எச்சரிக்கையாக இருப்பார்கள் ஆனாலும் கோட்டை விடுவதுண்டு. செலவு செய்வதில் மகிழ்ச்சி அடைவார்கள். வாழ்வில் சுப நிகழ்ச்சிகள் சுப விரயங்கள் அதிகம் உண்டாகும்

தர்ம காரியங்கள் மீது ஈடுபாடு கொண்டவர்கள். சாஸ்திரம், மெய்யியல் தத்துவ விசாரணையில் ஆர்வம் மிக்கவர்கள். பெண் மோகம் உண்டு. குழந்தைகள் மீது அதீத பிரியம் கொண்டவர்கள். கிரகங்கள் இவர்களுக்கு என்ன பலன்கள் கொடுக்கும் என்பதை காணலாம்.

லக்ன சுபர்களான சந்திரன்,செவ்வாய் கண்டிப்பாக வலுத்து இருக்க வேண்டும். சந்திரன், செவ்வாய் திசைகள் மிக சிறப்பை கொடுக்கும்! குரு திசை தொழில் காரகத்துவத்தை மேம்படுத்தும்.

செவ்வாய் லக்னத்தை பார்ப்பது உடற்பயிற்சி யில் அதிக ஈடுபாடு இருக்கும். முன்கோபம் வரும் அதில் நியாயம் உண்டு எனலாம். சனி குரு வுக்கு சமம் எனினும் இங்கே 11,12 அதிபதி மீன லக்னத்திற்கு சனி பகவான் தசா புத்திகள் பொதுவாக சிறப்புகளை செய்வதில்லை! ஆனாலும் அமர்ந்த நிலையை பொறுத்து சுப பலன்கள் உண்டு தான்.

மீனம் குரு வர்க்க லக்னம் என்பதால் ராகு தசாவில் கலவையான பலன்களை எதிர்பார்க்கலாம் செய்வார் இருக்கும் இடத்தை பொறுத்து.புதன் பாதகாதிபதி எனினும் கோணத்தில் வலுத்தால் கெடுதல் கிடையாது. லக்னத்தில் நீசம் பெறாமல் இருப்பது நல்லது. சுக்கிரன் லக்ன பாவி எனினும் 12ல் மறைந்தால் காரகத்துவம் கெடாது ஆண் ஜாதகருக்கு பெண்களால் லாபம் கிடைக்கும். சுக்கிரன் ஆட்சி பெறுவது நல்ல தேஜஸ் கிடைக்கும். போகத்தில் ஆர்வம் இருக்கும். கலையுணர்வு மிக்கவர்களாக இருப்பார்கள்.




இவர்களுக்கு மஞ்சள் சிவப்பு வண்ணங்கள் நன்மைகளை கொடுக்கும். குரு பகவான் வழிபாடு செய்து வருவது நல்லது. கடற்கரையில் அமர்ந்து வருவது மனதிற்கு நல்ல சக்தியை அதிகரிக்கும்.

சந்திரன், முருகன்,சிவ பெருமான் பெயர் கொண்டவர்கள் நட்பு வட்டத்தில் இருப்பார்கள் அவர்களால் லாபம் உண்டு.

இது வரையில் மீன லக்னம் பற்றிய பல அரிய தகவல்களை அறிந்து கொண்டோம். தொடர்ந்து ஜோதிடம் தொடர்பான செய்திகளை அடுத்தடுத்து இதழ்களில் பார்க்கலாம்.

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர். ஜோதிடம், தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் தொடர்புக்கு : 9894176494



# கீர்த்தி அளிக்கும் கார்த்திகேயன்

செங்கோல் பிடித்தவன் செவ்வேல் ஏந்தியவன்
சிக்கல் அறுப்பவன் பக்கத்துணை இருப்பவன்

பஞ்சவடி பெருந்தலத்தில் பகட்டாய் நிற்பவன்
கோதாவரிக் கரையில் கோயில் கொண்டவன்

அயிலும் மயிலும் அழகாம்சம் மின்னும்
இடக்கை இடையில் இருத்தி நிற்கும்
வலக்கை வெகுவாய் வல்லமை பெருக்கும்

உதய சூரியன் உவந்து வணங்கும்
இதயம் கவர் குறுநகை ததும்பும்
அருளைச் சொரியும் அழகன் வடிவம்
கருணை கம்பீரம் பொலிவு மிளிரும்
வெம்பகை வல்வினை வரும்வினை மிரளும்



பாத மலர்கள் வந்தனை செய்வின்
சிந்தையை சிறை பிடிப்பான்
கந்தனாய் யானிருக்க கவலைகள் ஏதென்பான்!

ஒருமுறை யேனும் திருமுக தரிசனம்
சகல சம்பத்துடன் பரம்பரை சுகமுறும்

நாளும் பொழுதும் நாடி வணங்கும்
நாசிக் மக்கள் நாயகன் கார்த்திகேயன்
நகரத்தார் போற்றும் இஷ்ட தெய்வம்

நாடும் அன்பர் நலிவுகள் நசியும்
நன்மை நடக்கும் நற்கதி கிட்டும்
நாடும் வீடும் நலமுடன் சிறக்கும்..



–அரு.சிவகாமி இராமநாதன்,
–ஒக்கூர்– நவிமும்பை

# அடுத்த இதழில்....

## கார்த்திக் முத்தப்பன் ( கண்டனூர் )
## நகரத்தார் கேப்பிட்டல் – எழுதும்

## Carbon capture and storage (CCS)/ Carbon Credits.



**• Carbon capture and storage (CCS)?**
**How it Helps to reduce the impact of emissions from energy-intensive industries.**

**• Carbon Credits?**
**how do they work to help your business reach its climate goals.**

**Carbon capture and storage (CCS) / Carbon Credits impact on Stocks**
**How we can make them fruitful to us.**

**ஒரு விரிவான அலசல் – நிதி மேலாண்மை பகுதியில்**

# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**

**நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல் மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின் பெட்டகமாக ஓர் மின்னிதழ்.**

**மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும் உங்கள் கைபேசி வாயிலாக...**

**நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள் மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,**

# 97917 76534

www.naamnagarathar.com